**டிஜிட்டல்...**(தொடர்ச்சி)

அறிவு கடந்த வருடம் 40.1 ஆக இருந்த அதே நேரம் அதற்கு முந்தைய ஆண்டு இதுவே 33.8 ஆக இருந்துள்ளது.

கணனிஅறிவை விட டிஜிட்டல் தொழில்நுட்பம் பற்றிய அறிவு கூடியுள்ளது. இது தனிப்பட்ட கணனிகளின் பாவனைகளிலிருந்து கையடக்கத் தொலைபேசிகள் மற்றும் டெப்லெட்களின் பாவனைக்கு நகர்வைக் காட்டுகிறது. இதே வேளை 2017 ஆம் ஆண்டு வீட்டில் பாவிக்கப்படும் கணனிகளின் சதவீதம் 22.98 ஆக உயர்ந்துள்ளது. இதுவே 2016 ஆம் ஆண்டு 21.6 வீதமாக இருந்தது. நகர குடியிருப்புகளில் கணனிப்பாவனை கடந்த ஆண்டு 38.2 வீதமாகவும் கிராமப்பகுதிகளில் 20.6 வீதமாகவும் பெருந்தோட்டப்பகுதிகளில் 4.5 வீதமாகவும் இருக்கின்றன. இதேவேளை கையடக்கத்தொலைபேசியின் பயன்பாடு கடந்த ஆண்டு 131.5 வீதமாக அதிகரித்துள்ளது. இதுவே முந்தைய ஆண்டில் 123.7 வீதமாக இருந்துள்ளது.